மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி
அ.வ.எண். 81/2019

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் வா.சா.1.

---

பெயர். – சௌந்திரராஜன்
த/பெ. – லேட்.வேலு
கிராமம் – உருளைகுடி
தொழில் – விவசாயம்
தாலுகா – எட்டையபுரம்
வயது – 54.

1872–ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2023–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 07–ஆம் நாள் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>முதல் விசாரணை</u>.–

1) நான் வாதி ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். எனக்கு அதில் உள்ள விவரங்கள் தெரியும். அதை வாதிகள் தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

| | |
|---|---|
| 1 | 28.08.2006ம் தேதியிட்ட பிராத தபசில் சொத்துக்களை 1ம்பிரதிவாதி பெயரில் உள்ள கணினிப்பட்டா நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2 | 17.05.2005ம் தேதியில் இறந்த வாதியின் தகப்பனார் வேலுவின் இறப்பு சான்றிதழ் சார்பதிவக நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3. | பிராது தபசில் சொத்திற்குரிய தீர்வை ரசீது எண்ணம்2 **வா.சா.ஆ.3 வரிசை ஆக** குறியீடு செய்யப்படுகிறது. |
| 4. | 16.10.2006ம் தேதியிட்ட 1ம்பிரதிவாதி, 2ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த மோசடி கிரைய ஆவண எண்.1833/2006 சார்பதிவக நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5 | 27.07.2018ம் தேதியிட்டு 3ம்பிரதிவாதி, 4ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த மோசடி கிரைய ஆவண எண்.1771/2018 சார்பதிவக நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 6 | 22.12.1985ம் தேதியிட்ட 1ம்பிரதிவாதி பெயரில் உள்ள நிலஉடமைப் பட்டா **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>குறுக்கு விசாரணை –</u> வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)A.முகமது சாதிக்உசேன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
07.09.2023.